| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>தர்மராஜ், த/பெ நடராஜன் | அ.வ.எண்.65/2020 | 09.06.2026 |

**குறுக்கு விசாரணை**

1. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் கிரையம் பெற்ற சொத்தில் ஒரு சென்ட் நிலத்தை வாதி கோரிவருகிறார். வாதி இந்த வழக்கில் சொல்லியுள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் அனைவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அவர்கள் குடும்ப சொத்தான 1 ஏக்கர் 5 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் 2 சென்ட் நிலத்தை வாதி 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் 28.09.2018 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஒப்பந்ததை செயல்படுத்த வாதி, எனக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.
2. நானும், வாதியும் மாமன், மைத்துனர் உறவுமுறை ஆவோம். வாதி எனக்கு எதிராக அ.வ.எண்.436/2004 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு வாதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு எதிராக மேற்படி வழக்கில் தீர்ப்பாணை பெற்றுவிட்டதால் தான் நான் 1 முதல் 3 பிரதிவாதிகள் வாதியுடன் செய்து கொண்ட ஒப்பந்தந்தை

நிறைவேற்றவிடாமல் தடை செய்துவருகிறேன் என்றால் சரியல்ல.

3. நான் வாதியுடன் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு முன்பாகவே ஒப்பந்தம் செய்துவிட்டேன், ஒப்பந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. வாதி ஒப்பந்தம் போட்ட பின்னர் தான், நான் ஒப்பந்தம் போட்டேன் என்றாலும், 2,3 பிரதிவாதிகளிடம் மட்டும் தான் நான் கிரைய ஒப்பந்தம் போட்டேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தை செயல்படுத்த கேட்டு அ.வ.எண்.427/2018 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனக்கு ஆதரவாக ஒருதலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான்.
4. வாதிக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்பதால் தான் 2,3 பிரதிவாதிகளுடன் சேர்ந்து மேற்படி வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் தீர்ப்பு 18.02.2020 அன்று பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் நான் கிரையம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி தீர்ப்பாணையை தொடர்ந்து நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2,3 பிரதிவாதிகளுக்கு பாதகம் ஏற்படும் என்பதால் தான் மேற்படி நிறைவேற்று மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்பதால் தான் 2,3 பிரதிவாதிகளுடன்

மேற்படி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 17.06.2026 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
தர்மராஜ்

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.